[1978 ஏப்ரல் 7

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, தேவராயநேரியில் நரிக்குறவர்களுக்காகக் கட்டப்பட்ட இல்லத்திலேயே அவர்கள் தங்குவது இல்லை என்ற புகார் வந்து கொண்டு இருக்கிறது. ஆகவே, இன்னும் அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுத்து, அவர்கள் தங்காமல் இருந்தால், அரசாங்கப் பணம் வீணுகச் செலவழிப்பதாக இருக்கும். அது பொருத்தமாக இருக்காது. அரிசனங்களைப் பொறுத்தவரையில் அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

(சில உறுப்பினர்கள் துணை விணுக்கள் எழுப்ப, கைகளை உயர்த்திக் கொண்டிருந்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த விணு திருவெறும்பூர் ஊராட்சி பற்றியது. அனுமதிப்பதற்கில்லை.

Thachoor Harijan Colony

* Q-582 Thiru J. JAMES: will the Hon. the Minister for Harijan welfare be pleased to state:

a) whether land has been acquired for the pathway leading to Thachoor Harijan colony in Thiruvettar Panchayat Union In Kanyakumari district

b) if so, whether the pathway way constructed, and

c) if not, the reasons for the delay?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

(அ) தச்சூர் அரிசனக் காலனிக்கு பாதை அமைக்க நிலம் ஆர்தஜிம் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) பாதை இன்னும் முழுவதுமாக அமைக்கப்படவில்லை.

(இ) நில எடுப்புச் சட்டம் பிரிவு 4 (1) -ன் படி முன்மொழிவு அறிவிக்கை வெளியிடப்பட்டபின், நிலச் சொந்தக்காரர்களில் ஒருவர் அவருடைய ஆர்ஜித நிலத்தில் ஒரு கட்டடத்தைக் கட்டி விட்டார். இந்தப் பகுதியைத்தவிர மற்ற நிலத்தில் பாதை அமைக்கப்பட்டு விட்டது, அந்த நிலத்தில் கட்டிய வீட்டை இடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் அந்த நிலச் சொந்தக்காரரோ தானுக முன்வந்து 26. 12. 1977-ல் வீட்டை இடித்து விட்டு நிலத்தை அரசிடம் ஒப்படைத்து விட்டார். இந்த நிலததில் பாதை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளது.